## முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து 'தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு' மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா – தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு!



முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் 'தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு'-ன் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு 'தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு' ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்தனர். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தார்.

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினை 'இந்திய தேசிய லீக்' மாநில தலைவர் எம்.பஷீர்அஹமது சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு!



முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் இந்திய தேசிய லீக் கட்சியின் மாநில தலைவர் எம்.பஷீர்அஹமது மற்றும் செயலாளர் தி.மு.அப்துல்காதர், பொருளாளர் எம்.குத்தூஸ்ராஜா, மாவட்ட தலைவர் அம்ஜத்கான் ஆகியோர் நேரில் சந்தித்து நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற இந்திய தேசிய லீக் நிர்வாகிகள் பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர். அதுபோது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உடனிருந்தார்.

### சென்னையில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணிக்குட்பட்ட சிறுபான்மையின அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்:

# பாசிச பா.ஜ.க.-வைத் துணிச்சலோடு எதிர்த்து நிற்கும் கழகத் தலைவரின் கரங்களை நீங்கள் பலப்படுத்த வேண்டும்!

**சென்னை,ஏப்.5-**

**சென்னையில், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணிக்குட்பட்ட சிறுபான்மை யின அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடான கலந்துரையாடல் நிகழ்ச்சியில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசினார்.**

**அப்போது அவர், ``சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய தி.மு.க-வை நீங்கள் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும். பா.ஜ.க-வைத் துணிச்சலோடு எதிர்த்து நிற்கின்ற நம் தலைவரின் கரத்தை நீங்கள் அத்தனை பேரும் பலப்படுத்த வேண்டும் என்றும், நான் உங்களையெல்லாம் அன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்" என்றும் குறிப்பிட்டார்.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் ராயப்பேட்டையில் நடைபெற்ற சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிறுபான்மை மக்கள், சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று ஆற்றிய உரைவருமாறு:**

## திருவல்லிக்கேணியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிறுபான்மைச் சொந்தங்கள் நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்கள், உங்களையெல்லாம் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சி.

உங்களிடத்தில் முதலில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், இந்த நிகழ்ச்சி ஏற்கனவே இரண்டு முறை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த இரண்டு முறையும் என்னால் வர முடியாமல், இன்றைக்கு மூன்றாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டு நடந்துகொண்டிருக்கிறது. அந்த இரண்டு முறையும் கழகத்தின் வேட்பாளர்கள் தேர்வு நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது. அதனால், நான் தலைவர் முதலமைச்சருடன் இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இருந்தாலும் இன்றைக்கு என் அழைப்பை ஏற்று இவ்வளவு சிரித்த முகத்துடன் நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்கள். இஸ்லாமியச் சகோதரிகள் அனைவருக்கும் இந்த நேரத்தில் என் நன்றியை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிமுகம் தேவையில்லை

உங்களுக்கு நானும், எனக்கு நீங்களும் அறிமுகம் தேவையில்லை. உங்களில் பலரை நான் பல முறை தனித்தனியாகச் சந்தித்திருக்கிறேன். ஆனால், இன்றைக்கு எல்லாரும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியை முதலில் இவ்வளவு சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கக்கூடிய மாவட்டச் செயலாளர் அவர்களுக்கும், அண்ணன் ரஹ்மதுல்லா அவர்களுக்கும் என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சிறுபான்மை மக்களுக்குமான உறவை பற்றி நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. அது இன்றைக்கு நேற்று தொடங்கிய உறவு கிடையாது. கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் மீது பேரறிஞர் அண்ணாவாக இருக்கட்டும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞராக இருக்கட்டும், மிகுந்த மதிப்பு உடையவர்கள். அதே மாதிரி கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மிகுந்த மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருந்தார். ஆகவே, அந்த உரிமையோடும் பாசத்தோடும் நான் உங்களையெல்லாம் இங்கே சந்திக்க வந்திருக்கிறேன்.

### உங்கள் குடும்பத்தில் ஒருவன்

இன்னும் சொல்லப்போனால் நானும் உங்களில் ஒருவன், உங்கள் குடும்பத்தில் ஒருவன், நாம் எல்லாம் ஒரே குடும்பம் என்கிற உணர்வோடுதான் நான் இன்றைக்கு இங்கே வந்திருக்கிறேன். மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் நாம் இன்று சந்தித்திருக்கிறோம். சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சரியாக 20 நாட்கள் இருக்கின்றன. இன்றைக்கு மூன்றாம் தேதி, 23-ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல். இந்தத் தேர்தலை ஒட்டி ஒரு முக்கியமான பணியாக இன்றைக்குக் காலை என்னுடைய தொகுதி மக்களையெல்லாம் சந்தித்துவிட்டு, உங்களைச் சந்திப்பதை என் கடமையாக எண்ணி இங்கே வந்திருக்கிறேன்.

### இந்தியாவுக்கே ஒரு முன்மாதிரி

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் மீண்டும் ஆட்சிக்கு வரும், மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்துடன் நாம் இங்கே சந்தித்திருக்கிறோம். அதுவும் எனக்கு என்ன பெருமை என்றால், நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி என்பதும் மதநல்லிணக்கத்துக்கு இந்தியாவுக்கே ஒரு முன்மாதிரி தொகுதி என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வளவு ஒற்றுமையுடன் இங்கே அத்தனை பேரும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நீங்கள் இந்தத் தொகுதியில் வெற்றி பெற வைத்திருக்கிறீர்கள். அவர் வழியில், எனக்கும் அந்த வாய்ப்பைச் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது கொடுத்துப் மிகப்பெரிய வெற்றியைத் தந்தீர்கள். அந்த வகையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன்.

### சேப்பாக்கம் செல்லப்பிள்ளை

தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்துக்குப் போனாலும், ஏன் இன்னும் சொல்லப்போனால், பல வெளி மாநிலங்களுக்குப் போனாலும் என்னை அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினராக மட்டும் பார்ப்பதில்லை. விளையாட்டுத் துறை அமைச்சராக மட்டும் பார்ப்பதில்லை. துணை முதலமைச்சராக மட்டும் பார்ப்பதில்லை. அவர்கள் என்னைச் செல்லமாக அழைப்பதே 'சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியின் செல்லப் பிள்ளை நீங்கள்' என்றுதான் இந்தத் தொகுதிப் பெயரைச் சொல்லி என்னை அழைப்பார்கள்.

உங்கள் எல்லாருக்குமே நன்றாகத் தெரியும். நான் என்றைக்குமே களத்தில் மக்களோடு மக்களாக உங்களோடு நிற்பவன். கடந்த ஐந்து வருடங்களாகவும் எந்தப் பிரச்சினை எதுவானாலும் உங்களோடு நின்றிருக்கிறேன். அது ரம்ஜானாக இருந்தாலும் சரி, கிறிஸ்துமஸாக இருந்தாலும் சரி, பொங்கலாக இருந்தாலும் சரி, கோவிட் காலமாக இருந்தாலும் சரி, எல்லா நாட்களும் உங்களில் ஒருவனாக என் அரசியல் பயணத்தைத் நான் பயணித்திருக்கிறேன். இன்னும் அதிகமாக உங்களுக்காக உழைப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன். அதற்கு உங்களின் ஆதரவு மிக மிக முக்கியம். அந்த ஆதரவைத் தேடி இன்றைக்கு உங்களிடம் வந்திருக்கிறேன்.

கலைஞரின் வழியில் நம் தலைவர், நம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சிறுபான்மையின மக்களின் பாதுகாவலனாகத் திகழ்ந்துகொண்டு இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் என்றைக்குமே சிறுபான்மை மக்களின் காவல் அரணாக, அவர்களின் நலனுக்காக அடுக்கடுக்கான திட்டங்களையும் நம் அரசு நிறைவேற்றி இருக்கிறது.

கலைஞர் அவர்கள்தான் சிறுபான்மை மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்கு 3.5% இட ஒதுக்கீடு கொடுத்தவர். அதே மாதிரி உலமாக்கள் நல வாரியத்தை உருவாக்கியதும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயரை அரசு கல்லூரிக்கு பெயரைச் சூட்டியவரும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

### வக்ஃப் நிறுவனங்கள் புனரமைப்பு

இன்றைக்கு நம் கலைஞர் வழியில் நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். ஹஜ் யாத்திரைக்குப் செல்கின்ற இஸ்லாமியர்களுக்கான மானியத் தொகையை 6 கோடி ரூபாயிலிருந்து நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர்தான் 10 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார். சமீபத்தில் ஹஜ் பயணிகளுக்கு உதவுகின்ற வகையில், நம் சென்னை விமான நிலையத்துக்குப் பக்கத்தில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'ஹஜ் இல்லம்' கட்டப்பட்டு வருகிறது. நிச்சயமாக நம் முதலமைச்சர்தான் மீண்டும் ஆட்சி அமைத்து விரைவில் அதனைத் திறப்பார்கள். அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 100 வக்ஃப் நிறுவனங்கள் இன்றைக்குப் புனரமைக்கப்பட்டு இருக்கின்றன.

உலமாக்கள் ஓய்வூதியம் 3,000 ரூபாயிலிருந்து இன்றைக்கு நம் முதலமைச்சர்தான் 5,000 ரூபாயாக அதனை உயர்த்திக் கொடுத்திருக்கிறார். இப்படி இன்னும் பல திட்டங்களை நான் வரிசைப்படுத்திச் சொல்ல முடியும். சிறுபான்மையினர் தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாகச் சுமார் 280 கோடி ரூபாய் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரு புறம் சிறுபான்மை மக்களுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இன்னொரு புறம் மதச்சார்பின்மையைப் பாதுகாக்கின்ற அரசியல் கடமையையும் நம் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

### தமிழ்நாடு என்றைக்குமே அமைதிப் பூங்கா

இன்றைக்கு இந்தியா முழுவதும் வெறுப்புப் பிரச்சாரங்கள் நடந்தாலும், மதவாதம் தலை தூக்கி ஆடினாலும், தமிழ்நாடு மட்டும் என்றைக்குமே ஓர் அமைதிப் பூங்காவாக இருந்திருக்கிறது. அதற்கு காரணம் நம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

இன்றைக்கு வட இந்தியாவில் பாசிச சக்திகள் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் புகுந்து தாக்குகிறார்கள். இஸ்லாமியர்களைத் தாக்குகிறார்கள். வீடுகளைப் புல்டோசர் கொண்டு இடிக்கிறார்கள். அஸ்ஸாம் மாநிலத்தின் பா.ஜ.க முதலமைச்சர் இஸ்லாமியர்களை அச்சுறுத்துவது போலத் தன்னுடைய சமூக வலைதளத்தில் அவரே பதிவுகள் போடுகிறார். அதன் பிறகு, நாடு முழுவதும் மிகுந்த எதிர்ப்பு கிளம்பியது.

ஒரு வாரத்துக்கு முன்பு உத்தரப்பிரதேசத்தில் ஒரு படகில் ரம்ஜான் விருந்து சாப்பிட்ட இஸ்லாமிய இளைஞர்கள் 14 பேரை போலீஸ் கைது செய்திருக்கிறது. இப்போது அவர்களுக்கு நீதிமன்றத்தில் பிணை இல்லை என்று மறுத்துவிட்டார்கள். இப்படித்தான் வட மாநிலங்களில் சிறுபான்மையின சமூகங்களை அச்சுறுத்தி, பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். அதே போன்றதொரு நிலைமையைத் தமிழ்நாட்டுக்குள்ளும் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் பாசிச சக்திகளின் ஒரே எண்ணம். நிச்சயம் தி.மு.க இருக்கின்ற வரைக்கும், எங்களின் தலைவர் இருக்கின்ற வரைக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்ற வரைக்கும் தமிழ்நாட்டில் அதனை நாங்கள் நடக்க விடவே மாட்டோம். தமிழ்நாட்டில் இது எடுபடாது.

நம் முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். உதாரணமாக, ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு கொண்டு வந்த வக்ஃப் வாரியத் திருத்த மசோதாவுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் நம் முதலமைச்சர் அவர்கள்தான் முதன்முதலில் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அத்துடன் நிறுத்தவில்லை. இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலும் தி.மு.க சார்பாக அதற்காகப் போராடிக்கொண்டு இருக்கிறோம், வழக்குத் தொடர்ந்திருக்கிறோம். ஆனால் யோசித்துப் பாருங்கள், அந்த வக்ஃப் வாரியத் திருத்த மசோதாவை பாசிச பா.ஜ.க. கொண்டு வந்த சமயத்தில்தான் இங்கே இருக்கக்கூடிய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அமித்ஷாவுடன் கூட்டணி பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டு இருந்தார்.

### என்னுடைய முதல் போராட்டம்

இங்கே ஏற்கனவே சொன்னது போல, என் பொதுவாழ்க்கையில் நான் பலமுறை கைது செய்யப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் என்றைக்குமே பெருமையாகச் சொல்வதுண்டு. சி.ஏ.ஏ., என்.ஆர்.சி. சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதனை எதிர்த்து, அதைக் கிழித்தெறிந்ததுதான் என்னுடைய முதல் போராட்டம், நான் கைது செய்யப்பட்ட முதல் போராட்டம். அதனை என்றைக்குமே நான் பெருமையாகச் சொல்வதுண்டு.

தமிழ்நாட்டுக்கு என்று என்றைக்குமே ஒரு தனி அடையாளம் உண்டு, தனித்தன்மை உண்டு. மதநல்லிணக்கத்தைப் பேசுபவர்கள் நாம். தமிழ்நாட்டு மக்கள்தான் என்றைக்குமே நம்மை ஆதரிப்பார்கள். வெறுப்பு அரசியலைப் பரப்புகின்ற பா.ஜ.க.-வைத் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்குமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ்நாட்டுக்குள் நுழைய முடியாமல் இருக்கக் கூடிய சிறுபான்மையினர் விரோத பா.ஜ.க-வை இன்றைக்கு அ.தி.மு.க எப்படியாவது தன் தோள் மீது வைத்து, தமிழ்நாட்டுக்குள் அழைத்து வர முயற்சி செய்கிறது. நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய தி.மு.க-வை நீங்கள் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும். பா.ஜ.க-வைத் துணிச்சலோடு எதிர்த்து நிற்கின்ற நம் தலைவரின் கரத்தை நீங்கள் அத்தனை பேரும் பலப்படுத்த வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் அன்போடு, உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம் ராயபுரம் சட்டமன்ற வேட்பாளர் சகோதரர் சுபேர்கான் அவர்களும் வந்திருக்கிறார்கள். எனவே, வருகின்ற சட்டமன்றத் தேர்தல் நம் தலைவர் அடிக்கடி சொல்வது போல, இது ஒரு சாதாரண சட்டமன்றத் தேர்தல் கிடையாது. இது டெல்லிக்கும் அணிக்கும், தமிழ்நாடு அணிக்குமான போட்டி. மதநல்லிணக்கத்துக்கும் பாசிசத்துக்கும் இடையே நடக்கின்ற போட்டி. இதில் நம் தமிழ்நாடு அணி நிச்சயம் வெற்றிப்பெற்றுக் காட்ட வேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

ஆகவே, கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும், நம் தலைவர் மீண்டும் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தாக வேண்டும். அதற்கு மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வர வேண்டும். குறிப்பாக நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி, ராயபுரம், அண்ணா நகர், ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதிகள் மட்டுமல்லாமல், 234 தொகுதிகளிலும் நம் சிறுபான்மை மக்கள் நம் அரசுக்கும் கழகத்துக்கும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சில கோரிக்கைகளையும் நீங்கள் வைத்திருக்கிறீர்கள். நிச்சயமாக உங்களின் கோரிக்கைகளை நம் முதலமைச்சரின் கவனத்துக்கு எடுத்துச்சென்று, ஆட்சி அமைந்த உடனே ஒவ்வொன்றாக, படிப்படியாகச் செய்து தரப்படும் என்கிற வாக்குறுதியையும் உங்களுக்குக் கொடுத்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாவட்டக் கழகச் செயலாளரும், அண்ணா நகர் சட்டமன்ற வேட்பாளருமான நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மதன்மோகன், நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர் ரஹ்மத்துல்லா, மற்றும் கழகத்தின் வட்ட செயலாளர்கள், சிறுபான்மை சமூகப் பிரதிநிதிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.